# உங்கள் உரிமைகளை

# அறியவும்

மொரீசியசில் புலம்பெயர்ந்த
தொழிலாளர்களுக்கான வழிகாட்டி



# 1. முன்னுரை

எதிர்கால மற்றும் தற்காலப் புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்குரிய உரிமைகளைப் பற்றியும் சட்டங்களை மீறினால் எடுக்கக்கூடிய திருத்தச் செயல்களைப் பற்றியும் தெரிவிக்கும்வண்ணம் இச்சிற்றேட்டின் நோக்கமாகும். இது துணைமைப் பொருளாதார நடவடிக்கைகளான கட்டும் தொழிலிலும் உருவாக்கத் தொழிலிலும் ஈடுபடுகின்ற புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு உரியது. கட்டும் தொழிலிலும் உருவாக்கத் தொழிலிலும் அடங்கும் கூறுகள் கீழ்வருமாறு காண்க:

- உணவுப்பொருட்கள்;
- குடிபானங்கள்;
- ஆடையணிகள்;
- தோலும் தோல் சார்ந்த பொருட்களும்;
- காகிதப்பொருட்கள்;
- வேதியியல் பொருட்கள்;
- நெகிழிப் பொருட்கள்;
- உருவாக்கப்பட்ட உலோகப் பொருட்கள்;
- மரப்பொருட்கள்;
- இயந்திரங்களும் கருவிகளும் என்பவை ஆகும்.

ஆட்கடத்து வியாபாரத்தினால் ஏற்படும் ஆபத்துகளைப் புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்குத் தெரிவிப்பதற்கும் பயன்படுகிறது.

நீதி, மனித உரிமைகள் மற்றும் நிறுவனத்துச் சீர்திருத்தத்துறை அமைச்சகமும் மற்ற நிறுவனங்களும் இணைந்து இவ்வழிகாட்டி தயாரிக்கப்பட்டது. அந்த நிறுவனங்களாவன:

- பாதுகாப்பு மற்றும் ரொடிரீகு அமைச்சகம்;
- வெளிநாட்டுறவு, வட்டார ஒருமைப்பாடு மற்றும் அனைத்துலக வணிகத்துறை அமைச்சகம்;
- சட்டத்துறைத் தலைவர் அலுவலகம்;
- தொழிலாளர், தொழிலுறவுகள், தொழில் மற்றும் பயிற்சித்துறை அமைச்சகம்;
- மொரீசியசு காவல் துறை;
- கடவுச்சீட்டு மற்றும் குடியேற்ற அலுவலகம்;
- அனைத்துலகப் புலம்பெயர்வுச் சங்கம்;

புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் பயன்படுத்துகின்ற முக்கிய மொழிகளில் மொழிபெயர்க்கப்படும் இச்சிற்றேட்டின் வெளியீட்டுக்குப் பிரிட்டிஷ் உயர் ஆணையமும் இணைந்து உதவித்தொகை அளித்துள்ளது.



# 2. மொரீசியசுக்கு வரும் முன்




## பொதுச் செய்திகள்

- மொரீசியசில் தங்கி வேலை செய்வதற்கு ஒரு வேலை அனுமதிச்சீட்டு, தங்கும் / நுழைவு அனுமதிச்சீட்டு ஆகிய இரண்டும் உங்களுக்குத் தேவைப்படும். இந்த ஆவணங்களைப் பெறாவிட்டால், நீங்கள் மொரீசியசுக்கு வரக்கூடாது.
- மொரீசியசிலிருந்து உங்களுக்கு ஓர் ஆட்சேர்ப்பு முகவர் தேவைப்பட்டால், இந்த வலையகத்தில் (http://labour.govmu.org) உள்ள அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு முகவர் பட்டியலிலிருந்து ஒருவராக இருக்க வேண்டும் என்று நீங்கள் பார்த்துக்கொள்ள வேண்டும்.
- மொரீசியசு தொழிலாளர் சட்டங்களை ஒட்டித்தான் வேலைக்கான ஒப்பந்தம் செய்து, அது உங்களாலும் உங்கள் முதலாளியாலும் ஒத்துக்கொள்ளப்பட வேண்டும். அது உங்கள் வேலைக்கான வரையறைகளும் வரைக்கட்டுகளும், உங்களுக்குக் கிடைக்கும் நலனடைவுகள், உங்கள் பொறுப்புகளும் உங்கள் முதலாளியுடைய பொறுப்புகளும் ஆகியவற்றை உறுதி செய்யும்.
- உங்கள் வேலை அனுமதிச்சீட்டுக்காகவும் தங்கும் அனுமதிச்சீட்டுக்காகவும் உங்கள் சார்பில் தொழிலாளர், தொழிலுறவுகள், தொழில் மற்றும் பயிற்சித்துறை அமைச்சகம், கடவுச்சீட்டு மற்றும் குடியேற்ற அலுவலகம் ஆகிய நிறுவனங்களுக்கு விண்ணப்பம் செய்ய உங்கள் முதலாளியுடைய பொறுப்பாகும்.
- நீங்கள் மொரீசியசுக்கு வரும் முன்பு சில மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்ள வேண்டும்.
- உங்கள் வேலை அனுமதிச்சீட்டு / தங்கும் அனுமதிச்சீட்டு முடிவுற்றபோது, உங்கள் சொந்த நாட்டுக்குப் போக உங்கள் முதலாளியால் வாங்கப்படும் ஒரு மீள்வுப் பயணச்சீட்டு உங்களுக்குக் கிடைக்கும்; அல்லது தகுதியுள்ள அதிகாரியின் ஒப்புதலால் உங்கள் முதலாளி உங்கள் வேலை அனுமதிச்சீட்டை இன்னொரு தவணைக்காகப் புதுப்பிக்கலாம்.

- நாணயம், மொழி, தட்பவெப்பநிலை, பணமாற்ற வீதம், வாழ்க்கைத் தரங்கள், சமய நடைமுறைகள், பொது விடுமுறைகள் போன்ற மொரீசியசைப் பற்றிய அடிப்படைச் செய்திகளைத் தேடுமாறு அறிவுறுத்தப்படுகிறீர்கள். உங்கள் சொந்த நாட்டில் மொரீசியசு தூதுக்குழு அல்லது தூதரகம் இருந்தால், அல்லது உங்கள் நாட்டால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டுத் தூதரகத்தில் நீங்கள் விசாரிக்கலாம்.
- மொரீசியசில் வேலை அனுமதிச்சீட்டு பெறுவதற்கு உங்கள் வயது 20 - 60க்குள் இருக்க வேண்டும்.
- உங்கள் கணவர் மனைவியோ குடும்ப உறுப்பினர்களோ உங்களுடன் வர அனுமதி இல்லை.
- போலி உறுதிமொழி, பொய்ச் செய்திகள் / தவறான செய்திகள், உரிமமில்லாத ஆட்சேர்ப்பு முகவர், அளவுக்கு மீறிய ஆட்சேர்ப்புக் கட்டணம் ஆகியவற்றைப் பற்றி நீங்கள் கவனமாக இருக்க வேண்டும்.
- ஆட்கடத்து வியாபாரத்திலிருந்து தம்மைப் பாதுகாக்க நீங்கள் முன்னெச்சரிக்கையாக இருக்க வேண்டும்.
- உங்களுடைய கடவுச்சீட்டை உங்கள் முதலாளி தம்மிடத்தில் வைத்துக்கொள்ள நீங்கள் அனுமதிக்கக்கூடாது.
- பட்டியலிட்ட உங்கள் முதலாளிக்காக மட்டும் வேலை செய்ய உங்கள் வேலை அனுமதிச்சீட்டு உங்களை அனுமதிக்கிறது. விதிவிலக்கான சூழ்நிலைகளில் தகுதியுள்ள அதிகாரியின் ஒப்புதல் கிடைக்காவிட்டால், உங்கள் அனுமதிச்சீட்டு வேறொரு முதலாளிக்கு இடமாற்றம் செய்யப்படாது.




உங்களுடைய கடவுச்சீட்டை உங்கள் முதலாளி தம்மிடத்தில் வைத்துக்கொள்ள நீங்கள் அனுமதிக்கக்கூடாது

## ஆட்சேர்ப்பு முகவர்

- ஒவ்வோர் ஆளுக்கும் செய்யப்படும் பதிவீட்டுக்கு 100 மொரீசியசு ரூபாய் என்னும் தொகையை மீறாமல், வேலையைச் சேர்ந்த ஆட்களின் முதல் மாதச் சம்பளத்திலிருந்து 10% முகவர் சேவைக் கட்டணத்தை எடுக்க மொரீசியசு வழக்கில் உள்ள சட்டவிதிமுறைகள் ஆட்சேர்ப்பு முகவரை அனுமதிக்கின்றன.
- வெளிநாட்டு ஆட்சேர்ப்பு முகவரால் எடுக்கப்பட்ட கட்டணம் அல்லது உள்ளூரில் பதிவுசெய்யப்பட்ட முகவருடன் சம்மதிக்கப்பட்ட கட்டணம்மீது மொரீசியசு அரசாங்கத்துக்கு எவ்விதச் சட்ட அதிகாரமும் இல்லை; ஆனால், கவனமாக இருக்குமாறு உங்களை அறிவுறுத்துகிறது.

## வேலை மற்றும் தங்கும் அனுமதிச்சீட்டுகளுக்கான விண்ணப்பம்





- அனுமதிச்சீட்டுகளைப் பெறுவதற்குத் தகுந்த மருத்துவச் சான்றிதழ்களைக் கொடுப்பது இன்றியமையாதது.
- எல்லா முக்கிய அனுமதிச்சீட்டுகளுக்காகவும் முதலாளி அரசாங்க அதிகாரிகளுக்கு விண்ணப்பிக்க வேண்டும்.
- தொழிலாளர், தொழிலுறவுகள், தொழில் மற்றும் பயிற்சித்துறை அமைச்சரால் வேலை அனுமதிச்சீட்டு வழங்கப்படுகிறது.
- கடவுச்சீட்டு மற்றும் குடியேற்ற அலுவலகம் தங்கும் / நுழைவு அனுமதிச்சீட்டை வழங்கும்.
- வேலை அனுமதிச்சீட்டுக்கான கட்டணம் உங்கள் முதலாளியால் கட்டப்பட வேண்டும். தங்கும் அனுமதிச்சீட்டு இலவசமாக வழங்கப்படும்.

## 3.மொரீசியசுக்குப் பயணம் செய்தல்

- உங்கள் வேலைக்கான ஒப்பந்தம், வேலை அனுமதிச்சீட்டு, தங்கும் / நுழைவு அனுமதிச்சீட்டு ஆகியவை உங்கள் குடியேற்றத்தை எளிமையாக்கி, மொரீசியசில் ஒரு குறிப்பிட்ட காலத்துக்குத் தங்கி வேலை செய்ய அனுமதிக்கும்.
- உங்கள் சொந்த / தாய் நாட்டில் உள்ள நெருங்கிய இரத்த உறவினர் ஒருவருக்கு இந்த ஆவணங்களின் ஒரு பிரதி கொடுக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.
- எளிதில் அடையக்கூடிய முக்கியமான மொரீசியசு தொலைபேசி எண்களும் உங்கள் சொந்த நாட்டுத் தொலைபேசி எண்களும் நீங்கள் வைத்துக்கொள்ள வேண்டும்.
- காவல் மற்றும் பிற அதிகாரி பாதுகாப்பு விசாரணை செய்தால், உங்கள் முக்கிய ஆவணங்களின் பிரதி ஒன்றை உங்களுடன் வைக்குமாறு அறிவுறுத்தப்படுகிறீர்கள்.



## 4.ஒரு புலம்பெயர்ந்த தொழிலாளரான உரிமைகள்




### 4.1 உங்கள் உரிமைகள்: நியாயமான ஊதியமும் மதிப்புக்குரிய கவனிப்பும்

#### அ. ஊதியம்

அ) மொரீசியசு குடிமக்களைப் போலவே தேசியக் குறும ஊதியத்தைப் பெற உங்களுக்கும் உரிமை உண்டு. 2018ஆம் ஆண்டு சனவரி மாதத்திலிருந்து குறும ஊதியச் சட்டம் நடைமுறைக்கு வந்துள்ளது. தற்போது அது ஏற்றுமதி சார் வணிக நிறுவனங்களுக்கு மாதத்துக்கு எட்டாயிரத்து நூற்று நாற்பது மொரீசியசு ரூபாயும் (Rs 8,140), ஏற்றுமதி சாரா வணிக நிறுவனங்களுக்கு எட்டாயிரத்து ஐந்நூறு மொரீசியசு ரூபாயும் (Rs 8,500) உள்ளது.

ஆ) உங்கள் முதலாளியால் கையெழுத்து போடப்பட்ட தெளிவான வரையறைகளும் வரைக்கட்டுகளும் கொண்டு தொழிலாளர் சட்டங்களை ஒட்டி அமைந்த ஓர் ஒப்பந்தத்தைப் பெற உங்கள் உரிமையாகும்.

இ) வருமானங்களையும் பிடித்தங்களையும் தெளிவாகக் குறிப்பிடும் ஓர் ஊதியச்சீட்டைப் பெற உங்கள் உரிமையாகும். உங்களைப் பொறுத்தவரை அளவுக்கு மீறிய அல்லது அனுமதிக்கப்படாத பிடித்தங்கள் இருந்தால், உங்கள் முதலாளியிடம் கூடுதலான விளக்கங்களைக் கேட்கலாம்.

ஈ) உங்கள் ஒப்பந்தத்தில் உள்ள மணிநேரங்களுக்கு அப்பால் வேலை செய்தால், உங்களுக்கு மிகைநேரக் கூலி கிடைக்க வேண்டும்.

உ) உங்களுக்குக் கொடுக்கப்பட்ட சீருடைகள், பாதுகாப்புச் சாதனங்கள், கருவிகள் ஆகியவற்றிற்கான செலவுகள் அல்லது தவற்றினாலோ கவனக்குறைவினாலோ எந்த ஒரு மனிதனுக்கோ உடைமைக்கோ ஏற்படும் இழிவுத்தொகை உங்கள் முதலாளியால் கழிக்கப்பட முடியாது.

ஊ) தேசிய ஓய்வூதியச் சட்டப்படி ஓய்வூதியப் பங்குத்தொகை கழிக்கப்படும்; ஆனால், சட்டப்படி அது திருப்பிக் கொடுக்கப்படலாம்.






#### ஆ. விடுப்பு

உங்கள் வேலைக்கான ஒப்பந்தத்தின்படியும் மொரீசியசு தொழிலாளர் சட்டங்களின்படியும் விடுப்புகளைக் கழிக்க உங்களுக்கு உரிமையுண்டு.

#### இ. உணவு, தங்குமிடம், இடவசதி மற்றும் போக்குவரவு






அ) நீங்கள் சுகமாக வாழ உங்கள் முதலாளி ஏற்கத்தக்க தங்குமிட அனுமதிச்சீட்டு கொண்ட இலவசத் தங்குமிடம் அல்லது இடவசதியும் அடிப்படை வசதிகளும் கொடுக்க வேண்டும்.

ஆ) தனி மெத்தை கொண்ட படுக்கை ஒன்று கிடைக்க உங்கள் உரிமையாகும்.

இ) 2011ஆம் ஆண்டிற்கான தொழில்வழிப் பாதுகாப்பு மற்றும் உடல்நல (தொழிலாளர் தங்குமிடம்) ஒழுங்குவிதிகள் தொழிலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உடல்நலச் சட்டங்களை வரையறை செய்து, நீர் வசதிகள், சுகாதார வசதிகள், குளியல் அறைகள், சொந்தப் பொருட்களுக்கான நிலைப்பெட்டி, சமையல் வசதிகள், பாத்திரங்கள், உறைப்பெட்டிகளும் குளிர்சாதனப் பெட்டிகளும், அறைகலன்கள், முதலுதவி வசதிகள், ஒரே கூரைகீழ் வசதிகளைப் பகிர்ந்து கொள்ளும்போது இருக்கும் உரிமைகள் பிறவற்றிற்கிடையில் கொண்டுள்ளன.

ஈ) உங்கள் வேலைக்கான ஒப்பந்தப்படியும் மொரீசியசு தொழிலாளர் சட்டங்களின்படியும், உங்கள் தங்குமிடத்துக்கும் வேலை செய்யும் இடத்துக்கும் இடையே உள்ள போக்குவரத்துச் செலவுகளை உங்கள் முதலாளி திருப்பிக் கொடுக்க வேண்டும் அல்லது உங்களுக்குப் போக்குவரத்து வசதிகளைத் தர வேண்டும்.

உ) நீங்கள் மிகைநேர வேலை செய்ய இருந்தால், சட்டப்படி உங்கள் முதலாளி உங்களுக்கு ஓர் இலவசச் சாப்பாடு அல்லது 70 மொரீசியசு ரூபாய்க்கான சாப்பாட்டு ஈட்டுப்படித்தொகையை அளிக்க வேண்டும்.



## ஈ. உடல்நலமும் பாதுகாப்பும்



அ) தாம் வேலை செய்யும் இடத்தில் உள்ள பாதுகாப்பு மற்றும் உடல்நல வேலை நிபந்தனைகள், பாதுகாப்பு மற்றும் உடல்நலத் தரங்கள் ஆகியவற்றை அறிந்துகொள்ள உங்கள் உரிமையாகும்.

ஆ) உங்கள் முதலாளியால் முடியும்வரை வேலை செய்யும் இடத்தில் ஆபத்துகளால் ஏற்படக்கூடிய இன்னல்களைப் பாதுகாப்பு மற்றும் உடல்நலப்படியாகக் குறைத்து, 2005ஆம் ஆண்டிற்கான தொழில்வழிப் பாதுகாப்பு மற்றும் உடல்நலச் சட்டங்களுக்கும், அச்சட்டத்தின்கீழ் வரும் ஒழுங்குவிதிகளுக்கும் இணங்கச் செயல்பட வேண்டும்.

இ) மொரீசியசில் உள்ள பொது உடல்நல நிறுவனங்களில் மருத்துவச் சிகிச்சை இலவசமாக அளிக்கப்படும்.

ஈ) வேலை செய்யும் இடத்தில் உங்களுக்குக் காயம் ஏற்பட்டால் அல்லது நீங்கள் வியாதியாய் இருந்தால், உங்கள் முதலாளி தம் சொந்தச் செலவில் உடனடியாக உங்களை ஒரு பொது மருத்துவமனைக்கோ அதைப் போன்ற வேறு நிறுவனத்துக்கோ அழைத்துப் போக வேண்டும் என்பது அவர் பொறுப்பு.

உ) உடல் காயம் ஏற்படக்கூடிய வாய்ப்புகள் இருக்குமிடத்தில், உங்கள் முதலாளி உங்களுக்குக் கையுறை, பாதுகாப்பான காலணி, மூச்சுக்கருவி போன்ற பாதுகாப்பான சாதனங்களைக் கொடுக்க வேண்டும்.


## உ. பயிற்சி

அ) நீங்கள் கையாளுகின்ற மூலப்பொருட்களும் கருவிகளும், அவ்வாறு செய்யும்போது ஏற்படக்கூடிய இன்னல்கள், தம்மை எவ்வாறு பாதுகாப்பது முதலியவற்றைப் பற்றி உங்கள் முதலாளி உங்களுக்குத் தகுந்த பயிற்சி, தகவல், கட்டளைகள் ஆகியவற்றைத் தர வேண்டும்.

ஆ) உங்களுக்குப் புரிகிற மொழியில் அப்பயிற்சி அமைய வேண்டும்.






இந்தப் பகுதி எடுக்கப்பட்டுக் கையடக்க வழிகாட்டியாகப் பயன்படுத்தப்படலாம்

## வேலை அனுமதிச்சீட்டு

- தொழிலாளர் சார்பாக முதலாளி விண்ணப்பம் செய்ய வேண்டும்
- தொழிலாளர் மருத்துவப் பரிசோதனை செய்ய வேண்டும்
- விண்ணப்பக் கட்டணங்கள் முதலாளியால் கட்டப்படுகின்றன
- நீங்கள் பயணம் செய்யும் முன்பும் வேலை செய்யும் முன்பும் வேலை அனுமதிச்சீட்டைப் பெற்றிருக்க வேண்டும்
- வேலை அனுமதிச்சீட்டு முடிவுறும் மூன்று மாதங்களுக்கு முன்பாகவே புதுப்பித்தலுக்கான விண்ணப்பம் தொழிலாளர், தொழிலுறவுகள், தொழில் மற்றும் பயிற்சித்துறை அமைச்சகத்தில் விண்ணப்பம் செய்ய வேண்டும்
- உங்கள் வேலை அனுமதிச்சீட்டு முடிவுறும்போது, தொடர்ந்து வேலை செய்வது சட்டத்துக்குப் புறம்பானது என்று கருதப்பட்டு, நீங்கள் நாட்டை விட்டுப் போக வேண்டும்
- உங்கள் வேலை அனுமதிச்சீட்டில் குறிக்கப்பட்ட முதலாளிக்காக மட்டும் வேலை செய்ய அனுமதிக்கிறது; அவருக்காக வேலை செய்ய நிறுத்தினால் அது உடனே முடிவு பெறும். விதிவிலக்கான சூழ்நிலைகளில் தகுதியுள்ள அதிகாரியின் ஒப்புதல் கிடைக்காவிட்டால், உங்கள் அனுமதிச்சீட்டு வேறொரு முதலாளிக்கு இடமாற்றம் செய்யப்படாது




## தங்கும் அனுமதிச்சீட்டு



- மொரீசியசில் தங்குவதற்கு உங்களுக்கு ஒரு தங்கும் அனுமதிச்சீட்டு தேவைப்படும்
- தொழிலாளர் சார்பாக முதலாளியால் விண்ணப்பம் செய்யப்படுகிறது
- தங்கும் அனுமதிச்சீட்டு அதிகமாக 4 ஆண்டுகளுக்கு உரியதானாலும் அதைப் புதுப்பிக்கலாம்
- தங்கும் அனுமதிச்சீட்டு முடிவுறும் மூன்று மாதங்களுக்கு முன்பாகவே புதுப்பித்தலுக்கான விண்ணப்பம் கடவுச்சீட்டு மற்றும் குடியேற்ற அலுவலகத்தில் விண்ணப்பம் செய்ய வேண்டும்
- உங்கள் தங்கும் அனுமதிச்சீட்டு முடிவு பெற்றால், மொரீசியசில் தங்குவது சட்டத்துக்குப் புறம்பானது



## விமானப் பயணச்சீட்டு

உங்கள் வேலை அனுமதிச்சீட்டு முடிவுறும்போது அல்லது வேலைக்கான ஒப்பந்தம் முன்கூட்டியே முடிவுறும்போது அல்லது வேறொரு காரணம் இருக்கும்போது உங்கள் முதலாளி உங்களுக்கு ஒரு மீள்வு விமானப் பயணச்சீட்டு கொடுக்க வேண்டும்

## ஊதியம்

- உங்கள் வேலைக்கான ஒப்பந்தத்தின் வரையறை மற்றும் வரைக்கட்டுகளுக்கேற்ப உங்கள் ஊதியம் தீர்மானிக்கப்படும்
- 2018ஆம் ஆண்டு சனவரி மாதத்திலிருந்து தேசியக் குறும ஊதியம் நடைமுறைக்கு வந்துள்ளது. அது புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு உரியது; அது ஏற்றுமதி சார் வணிக நிறுவனங்களுக்கு மாதத்துக்கு எட்டாயிரத்து நூற்று நாற்பது மொரீசியசு ரூபாயும் (Rs 8,140), ஏற்றுமதி சாரா வணிக நிறுவனங்களுக்கு மாதத்துக்கு எட்டாயிரத்து ஐந்நூறு மொரீசியசு ரூபாயும் (Rs 8,500) தற்போதைக்கு உள்ளது




## தங்குமிடம், இடவசதி மற்றும் போக்குவரவு



- நீங்கள் சுகமாக வாழ உங்கள் முதலாளி உங்களுக்கு அறைகலனுடன் அமைந்த தங்குமிடத்தையும் அடிப்படை வசதிகளையும் கொடுக்க வேண்டும்
- ஒரு தனிப் படுக்கை கிடைக்க உங்கள் உரிமையாகும்
- தங்குமிடத்தைப் பகிர்ந்து கொள்வதன் குறுமத் தரங்கள் 2011ஆம் ஆண்டிற்கான தொழில்வழிப் பாதுகாப்பு மற்றும் உடல்நல (தொழிலாளர் தங்குமிடம்) ஒழுங்குவிதிகளில் குறிக்கப்பட்டுள்ளன
- உங்கள் முதலாளி உங்களுக்குப் போக்குவரத்து வசதிகளைத் தரலாம் அல்லது உங்கள் தங்குமிடத்துக்கும் வேலை செய்யும் இடத்துக்கும் இடையே உள்ள போக்குவரத்துச் செலவுகளைத் திருப்பிக் கொடுக்கலாம்

## சாப்பாட்டு ஈட்டுப்படித்தொகை

நீங்கள் மிகைநேர வேலை செய்ய இருந்தால், சட்டப்படி உங்கள் முதலாளி உங்களுக்கு ஓர் இலவசச் சாப்பாடு அல்லது 70 மொரீசியசு ரூபாய்க்கான சாப்பாட்டு ஈட்டுப்படித்தொகையை அளிக்க வேண்டும்



## உடல்நலம்

- பொது மருத்துவமனைகள் அல்லது பொது உடல்நல நிறுவனங்கள் இலவச மருத்துவச் சிகிச்சை அளிக்கின்றன
- வேலை செய்யும் இடத்தில் உங்களுக்குக் காயம் ஏற்பட்டால் அல்லது நீங்கள் வியாதியாய் இருந்தால், உங்கள் முதலாளி தம் சொந்தச் செலவில் உடனடியாக உங்களை ஒரு பொது மருத்துவமனைக்கோ அதைப் போன்ற வேறு நிறுவனத்துக்கோ அழைத்துப் போக வேண்டும் என்பது அவர் பொறுப்பு



## அடையாள ஆவணங்கள்

காவல் மற்றும் பிற அதிகாரி பாதுகாப்பு விசாரணை செய்தால், உங்கள் முக்கிய ஆவணங்களின் பிரதி ஒன்றை உங்களுடன் வைக்குமாறு அறிவுறுத்தப்படுகிறீர்கள்





**உங்களுடைய கடவுச்சீட்டை உங்கள் முதலாளி தம்மிடத்தில் வைத்துக்கொள்ள அவருக்கு எந்த உரிமையும் இல்லை**



## உங்கள் உரிமைகளை மீறுதல்

உங்கள் உரிமைகள் மீறப்பட்டால், நீங்கள் அவசரத் தொலைபேசி எண்களில் கூப்பிட்டுத் தெரிவிக்கலாம், அல்லது காவல் நிலையத்துக்குப் போய்ப் புகார் செய்யலாம், அல்லது தொழிலாளர், தொழிலுறவுகள், தொழில் மற்றும் பயிற்சித்துறை அமைச்சகத்தோடு அல்லது மனித உரிமைகளுக்கான நிறுவனங்களோடு தொடர்புகொள்ளலாம்

999 அல்லது 148 என்னும் எண்கள் காவல் அவசரத் தொலைபேசி எண்கள் ஆகும்
காவல் தகவல் நிலையம் : +230 208 0034 / 35



## பிற தொலைபேசி எண்கள்

| தொழிலாளர், தொழிலுறவுகள், தொழில் மற்றும் பயிற்சித்துறை அமைச்சகம் | |
|---|---|
| தலைமை அலுவலகம்: | +230 207 2711 |
| புலம்பெயர்ந்த தொழிலாளர் சிறப்புப் பிரிவு: | +230 207 2600 |
| தொழிலாளர் தங்குமிடம் மற்றும் இடவசதிப் பிரிவு: | +230 207 2732 |
| வேலை அனுமதிச்சீட்டுப் பிரிவு: | +230 405 0100 |
| வாய்ப்புச் சமத்துவ ஆணையம்: | +230 201 3502 |
| தேசிய மனித உரிமைகள் ஆணையம்: | +230 208 2856 |
| பாலினச் சமத்துவம், குழந்தை வளர்ச்சி மற்றும் குடும்பநல அமைச்சகம்: | +230 405 3300 |

## ஆட்கடத்து வியாபாரம்


- ஆட்கடத்து வியாபாரத்தின் தடுப்புச் சட்டப்படி ஆட்கடத்து வியாபாரம் தண்டனைக்குரியது
- வேலை செய்வதற்கோ பாலியல் செயல்களைச் செய்வதற்கோ உங்களை வற்புறுத்தவும் பயமுறுத்தவும் மிரட்டவும் முடியாது
- ஆட்கடத்து வியாபாரத்துக்கு ஆளானவரை 42 நாட்கள் வரை நாட்டில் தங்கச் சட்டம் அனுமதிக்கிறது



வலுக்கட்டாய உழைப்பு



வன்முறை


வலுக்கட்டாய விபசாரம்



### புகலிடம்

நீங்கள் ஆட்கடத்து வியாபாரத்துக்கு ஆளாகிவிட்டால், அரசாங்க அதிகாரியின் பாதுகாப்புகீழ் நீங்கள் ஒரு புகலிடத்தையும், மருத்துவ மற்றும் உளவியல் உதவியையும் தகுந்த கவனத்தையும் (உணவும் உடையும்) பெற அனுமதிக்கப்படலாம்.

## விடுப்பு

உங்கள் வேலைக்கான ஒப்பந்தத்துக்கேற்பவும் மொரீசியசு தொழிலாளர் சட்டங்களுக்கேற்பவும் உங்கள் விடுப்பைக் கழிக்க உங்கள் உரிமையாகும்.



## ஆட்சேர்ப்பு முகவர்



(www.labour.govmu.org) என்னும் வலையகத்தை ஆலோசித்து, மொரீசியசிலிருந்து தாம் தொடர்புகொள்கின்ற ஆட்சேர்ப்பு முகவரிடம் ஏற்கத்தக்க உரிமம் ஒன்று இருக்கிறது என்பதை நீங்கள் உறுதிசெய்ய வேண்டும்

போலி உறுதிமொழி, அளவுக்கு மீறிய ஆட்சேர்ப்புக் கட்டணம் ஆகியவற்றைப் பற்றி நீங்கள் கவனமாக இருக்க வேண்டும்

வெளிநாட்டு ஆட்சேர்ப்பு முகவரால் எடுக்கப்பட்ட கட்டணம் அல்லது உள்ளூரில் பதிவுசெய்யப்பட்ட முகவருடன் சம்மதிக்கப்பட்ட கட்டணம் மீது மொரீசியசு அரசாங்கத்துக்கு எவ்விதச் சட்ட அதிகாரமும் இல்லை; ஆனால், கவனமாக இருக்க வேண்டும் என்று அறிவுறுத்துகிறது

## தொழிலாளர் ஒன்றியம்

நீங்கள் வேலை செய்யும் இடத்தில் உள்ள தொழிலாளர் ஒன்றியத்தில் ஓர் உறுப்பினராக இருக்கவும் ஒன்றியத்தின் சட்ட நடவடிக்கைகளில் கலந்துகொள்ளவும் உங்களுக்கு உரிமை உண்டு



### ஊ. பிற வசதிகளும் சுகங்களும்

நீங்கள் வேலை செய்யும் இடத்தில் உங்கள் முதலாளி உங்களுக்குக் கீழ்க்காணும் சுகங்களும் வசதிகளும் தர வேண்டும்.


சுவர்க்காரம் மற்றும் சுத்தமான நீர் உள்ளிட்ட சலவை வசதிகள்


சுகாதார வசதிகள்


குடிநீர்


முதலுதவி வசதிகள்


உணவு உட்கொள்ள அல்லது உணவக வசதிகள்

## 4.2. வேறுபாடுகளிலிருந்து விடுவிக்க உங்கள் உரிமை

அ) மொரீசியசில் ஒரு வெளிநாட்டவராக இருந்து, மொரீசியசு குடிமக்களைப் போலவே குடிமை உரிமைகளை அனுபவிக்க உங்களுக்கு உரிமை உண்டு.

ஆ) சம மதிப்புள்ள வேலையைச் செய்யும்போது, ஒரு தொழிலாளர் இன்னொரு தொழிலாளரைவிடக் குறைந்த ஊதியத்தைப் பெறக்கூடாது என்று ஒவ்வொரு முதலாளியும் தொழிலுரிமைச் சட்டப்படி பார்த்துக்கொள்ள வேண்டும்.

இ) வயது, சமயக்கோட்பாடு, சாதி, பாலினம், பாலியல் விருப்பம், இனம், சொந்த இடம், மதம், நிறம், உடல் ஊனம் ஆகியவற்றை உள்ளிட்டு, மனிதத்தரத்தை ஒட்டி அமைந்த வேறுபாட்டை வாய்ப்புச் சமத்துவச் சட்டம் தடுக்கிறது.

## 4.3. ஓர் ஒன்றியத்தைச் சேர்வதற்கான உங்கள் உரிமை

அ) நீங்கள் வேலை செய்யும் இடத்தில் உள்ள தொழிலாளர் ஒன்றியத்தைச் சேர்வதிலிருந்து உங்கள் முதலாளி உங்களைத் தடுக்கவும், ஒன்றியத்தின் சட்ட நடவடிக்கைகளில் கலந்துகொள்வதற்கு உங்கள்மீது நடவடிக்கை எடுக்கவும் முடியாது.

## 4.4. பாலியல் சிரமத்திலிருந்து விடுவிக்க உங்கள் உரிமை

அ) உங்கள் முதலாளி அல்லது உடன் தொழிலாளர் அல்லது இன்னொரு மனிதர் சட்டப்படியாக உங்களைப் பாலியல் சிரமப்படுத்த முடியாது.

ஆ) பாலியல் சிரமத்தின்போது உண்டாகும் அவமானம், துன்பம் மற்றும் பயம் கீழ்க்கண்டவற்றால் ஏற்படும்:



(i) ஒரு வரவேற்காத பாலியல் சைகை;

(ii) ஒன்றை எதிர்பார்க்கும் வகையில் ஒரு வரவேற்காத பாலியல் கோரிக்கை; அல்லது

(iii) பாலியல் தன்மை கொண்ட ஒரு வரவேற்காத நடத்தை.

இ) நீங்கள் பாலியல் சிரமத்துக்கோ சுரண்டலுக்கோ ஆளாகிவிட்டீர்கள் என்றால், காவல் அல்லது தொழிலாளர், தொழிலுறவுகள், தொழில் மற்றும் பயிற்சித்துறை அமைச்சகத்தோடு தொடர்புகொள்ளலாம்.

ஈ) eoc.govmu.org என்னும் ஆணையத்தின் வலையகத்தில் உள்ள புகார்ப் படிவத்தாளைப் பதிவிறக்கம் செய்து நிரப்பதன் மூலம் நீங்கள் வாய்ப்புச் சமத்துவ ஆணையத்திடம் புகார் செய்யலாம். மேற்குறிப்பிட்ட படிவத்தாள் +230 2013408 என்னும் எண்ணில் தொலைநகலி அனுப்பலாம் அல்லது eoc@govmu.org என்னும் மின்னஞ்சல் முகவரியில் அனுப்பலாம்.

## 4.5.புகார் செய்ய உங்கள் உரிமை

அ) உங்கள் வேலைக்கான வரையறைகளும் வரைக்கட்டுகளும், வேலை செய்யும் இடத்தில் பாதுகாப்பும் உடல்நலமும், உங்கள் தங்குமிட வசதியிலுள்ள வாழ்க்கை நிபந்தனைகள் ஆகியவற்றுடன் உடன்பாடு இல்லாவிட்டால், நீங்கள் தக்க அதிகாரியிடம் உங்கள் முதலாளிமீது முறை சார் புகார் செய்யலாம்.

ஆ) உங்கள் முதலாளி உங்களைத் தவறாகப் பயன்படுத்தினால், அந்தச் சூழ்நிலை தெரிந்துகொள்ள அனுமதிக்காதீர்கள். உங்கள் பாதுகாப்பினை உறுதி செய்து அரசாங்க நிறுவனங்களிடம் ஆலோசனையும் உதவியும் கேட்கவும்.

### பயனுள்ள தொலைபேசி எண்கள்

**காவல்**

நீங்கள் 999 அல்லது 148 என்னும் அவசரத் தொலைபேசி எண்களில் காவலுடன் தொடர்புகொள்ளலாம் அல்லது 208 0034 அல்லது 208 0035 என்னும் எண்களில் காவல் தகவல் நிலையத்துடன் தொடர்கொள்ளலாம். அவை 24 மணிநேர அடிப்படையில் இயங்குகின்றன.

உங்களுடைய உடனடித்தேவை, இருப்பிடம், தொடர்புகொள்ள நீங்கள் பயன்படுத்துகின்ற தொலைபேசி எண் ஆகியவற்றை அவர்களுக்குத் தெரிவிக்கவும், நீங்கள் ஆங்கிலத்தில் பேசாவிட்டால் ஓர் உரைபெயர்ப்பாளருக்காகக் கேட்கவும் அறிவுறுத்தப்படுகிறீர்கள்.





### தொழிலாளர், தொழிலுறவுகள், தொழில் மற்றும் பயிற்சித்துறை அமைச்சகம்

வேலை தொடர்பான அனைத்துப் பிரச்சனைகளுக்காகவும் 08.45 மணிமுதல் 16.00 மணிவரை அலுவலக நேரத்தின்போது நீங்கள் தொழிலாளர், தொழிலுறவுகள், தொழில் மற்றும் பயிற்சித்துறை அமைச்சகத்துடன் தொடர்புகொள்ளலாம். அதன் முகவரியாவது 'விக்டோரியா ஹவுஸ், செண்ட் லூயிசு தெரு, போட்லூயிசு, மொரீசியசு' என்பது ஆகும்.

உங்கள் வட்டாரத்தில் உள்ள வட்டார / இணை அலுவலகங்களுடனும் நீங்கள் தொடர்புகொள்ளலாம்.

முக்கியத் தொலைபேசி எண்கள் கீழ்வருமாறு காண்க:

| துறைகள் | தொலைபேசி எண் | பொருள் |
|---|---|---|
| தலைமை அலுவலகம் | mol@govmu.org<br>+230 207 2711 | முழு நிர்வாகம் |
| புலம்பெயர்ந்த தொழிலாளர் சிறப்புப் பிரிவு | +230 207 2600<br>+230 207 2640 | வேலைக்கான ஒப்பந்தத்தின் வரையறைகளும் வரைக்கட்டுகளும் |
| தொழிலாளர் தங்குமிடம் மற்றும் இடவசதிப் பிரிவு | +230 207 2600<br>+230 207 2732 | தொழிலாளர் தங்குமிட வசதிகளுக்கான பாதுகாப்பு மற்றும் உடல்நலத் தரங்கள் |
| தொழில்வழிப் பாதுகாப்பு மற்றும் உடல்நலப் பிரிவு | +230 207 2600 | வேலை செய்யும் இடத்தில் பாதுகாப்பு மற்றும் உடல்நலத் தரங்கள் |
| வேலை அனுமதிச்சீட்டுப் பிரிவு | +230 405 0100 | மொரீசியசு குடிமக்கள் அல்லாதவர்களுக்கான வேலையும் வேலை அனுமதிச்சீட்டின் படைப்பும் |

### பாலினச் சமத்துவம், குழந்தை வளர்ச்சி மற்றும் குடும்பநல அமைச்சகம்

பெண்ணுரிமை, ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே சமத்துவம் ஆகியவற்றைத் தொடர்பான விவரங்கள்

தலைமை அலுவலகம் +230 405 3300

### கடவுச்சீட்டு மற்றும் குடியேற்ற அலுவலகம்

தங்கும் / நுழைவு அனுமதிச்சீட்டுகள், கடவுச்சீட்டுகள் ஆகியவற்றைத் தொடர்பான விவரங்கள்

மின்னஞ்சல் **piomain@govmu.org** தொலைபேசி **+230 210 9312**

| நிறுவனம் | தொடர்பு எண் | பொருள் |
|---|---|---|
| தேசிய மனித உரிமைகள் ஆணையம் | +230 208 2856 | அரசியல் அமைப்பில் கூறப்பட்ட மனித உரிமைகளின் சட்டமீறல் |
| வாய்ப்புச் சமத்துவ ஆணையம் | +230 201 3502<br>+230 201 1074 | வேறுபாடும் பாலியல் சிரமமும் |
| தனியார் காவல் புகார் ஆணையம் | +230 214 2551 | தங்கள் செயல்பாட்டின்போது காவல் அலுவலர்மீது புகார் செய்தல் (ஊழல், கருப்புப் பணத்தின் மூல ஆதாரத்தை மறைத்தல் ஆகியவற்றைத் தவிர) |

## 5. உங்கள் ஒப்பந்தம் முன்கூட்டியே நிறுத்தம் செய்தல்

அ) உங்கள் முதலாளி உங்கள் வேலையை முன்கூட்டியே நிறுத்தம் செய்துவிட்டால், முடிவுக்கு முன்னறிவிப்பை உட்பட உங்களுக்குக் கொடுக்க வேண்டியவை, நீங்கள் வேலை செய்த கடைசி நாள் வரை மீதமுள்ள கூலி, ஆண்டு இறுதி அன்பளிப்புத் தொகை, மீதமுள்ள ஆண்டு விடுப்பு ஆகியவை முதலாளியால் கட்டப்படும்.

ஆ) மிகக் கெட்ட நடத்தையின் அடிப்படையில் உங்கள் ஒப்பந்தம் நிறுத்தம் செய்யப்பட்டால், நீங்கள் வேலை செய்த கடைசி நாள் வரையுள்ள கூலி மட்டும் உங்களுக்குக் கிடைக்கும்.

இ) பொருளாதாரக் காரணங்கள், தொழில்நுட்பம், கட்டமைப்பு அல்லது நிறுவனத்தைப் பாதிக்கும் இணையான தன்மைகள் ஆகியவற்றின் பொருட்டு நிறுத்தம் செய்யப்பட்டால், ஒரு புலம்பெயர்ந்த தொழிலாளருக்கு (12 மாதங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலக்கட்டத்துக்குத் தொடர்ந்து வேலையில் இருப்பவர்) ஒவ்வொரு 12 மாதக்காலத்துக்கும் ஒரு மாதத்தின் கால்வாசி சம்பளம் கொடுக்கப்படும்; கூடுதலான மாதங்களுக்கு அது சரிசம வீதப்படி கொடுக்கப்படும்.

ஈ) ஒரு புலம்பெயர்ந்த தொழிலாளருக்குக் கொடுக்க வேண்டியவை கொடுக்கப்படவில்லை என்றால், அவர் தொழிலாளர், தொழிலுறவுகள், தொழில் மற்றும் பயிற்சித்துறை அமைச்சகத்தின் புலம்பெயர்ந்த தொழிலாளர் சிறப்புப் பிரிவிடம் புகார் செய்யலாம்.

உ) உங்கள் வேலை அனுமதிச்சீட்டு முடிவுறும்போது அல்லது அது இரத்து செய்யப்படும்போது அல்லது வேறொரு காரணம் இருக்கும்போது உங்கள் முதலாளி உங்களுக்கு ஒரு மீள்வு விமானப் பயணச்சீட்டு கொடுக்க வேண்டும்.




## 6. தவிர்க்க வேண்டிய குற்றங்கள்

- உங்கள் நுழைவுச்சீட்டு அல்லது அனுமதிச்சீட்டு முடிவுற்ற பிறகு சட்டப்படியாக நீங்கள் மொரீசியசில் தங்கக்கூடாது. 1,000 ரூபாய் மிகைபடாத அபராதமும் ஓராண்டு மிகைபடாத சிறைத் தண்டனையும் உங்களுக்குக் கிடைக்கலாம்.
- உங்கள் வேலை அனுமதிச்சீட்டில் குறிக்கப்பட்டுள்ள முதலாளியைத் தவிர வேறு எந்த முதலாளிக்கும் நீங்கள் வேலை செய்யக்கூடாது.
- உங்கள் வேலை அனுமதிச்சீட்டு முடிவுற்ற பிறகு நீங்கள் தொடர்ந்து வேலை செய்யக்கூடாது. வேலை அனுமதிச்சீட்டு இல்லாமல் வேலை செய்வதற்கு 25, 000 ரூபாய் தொடங்கி 50, 000 ரூபாய் வரையிலான அபராதமும் 2 ஆண்டுகளுக்கான சிறைத் தண்டனையும் கிடைக்கும்.
- ஊழல் செயல்கள், இலஞ்சம் கொடுத்தல் ஆகியவை குற்றச் செயல்கள் ஆகும் என்று நீங்கள் நினைவுபடுத்தப்படுகிறீர்கள்.







## 7. ஆட்கடத்து வியாபாரம்

கல்வியறிவு, ஆணோ பெண்ணோ, எவ்வயதுக்கான ஆட்கள், குடிமகனோ வெளிநாட்டவரோ என்றெல்லாம் பார்க்காமல், எவராலும் ஆட்கடத்து வியாபாரத்துக்கு ஆளாக முடியும்.

மொரீசியசு ஆட்கடத்து வியாபாரத்தின் தடுப்புச் சட்டப்படி, ஆட்கடத்து வியாபாரமாவது சுரண்டலின் பொருட்டு, மிரட்டல், வற்புறுத்தல், பயமுறுத்தல், வஞ்சகம் அல்லது கட்டாயப்படுத்தல், கடத்தல், ஏமாற்றம், அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தல், மென்மையான நிலையைத் தவறாகப் பயன்படுத்தல் ஆகியவற்றின் மூலமாக ஒரு மனிதனை வேலைக்கு அமர்த்துவதும், ஒதுக்கிடுவதும், வாங்கிப் பெறுவதும், கைப்பற்றுவதும், நீக்குவதும், கொண்டு செல்வதும், இடமாற்றம் செய்வதும், புகலிடத்தில் தங்க வைப்பதும், பெறுவதும் ஆகும். பாலியல் சுரண்டல், வலுக்கட்டாய உழைப்பு, சட்டத்துக்கு மாறாக உடலுறுப்புகளை எடுத்தல், எல்லாக் கொத்தடிமை வகைகளும் அல்லது கொத்தடிமைக்கு இணையான செயல்பாடுகளும் ஆகியவை சுரண்டலில் அடங்குகின்றன.




தொழிலாளர் கடத்துவோர் மற்றும் பாலியல் கடத்துவோர்மீது வழக்கு தொடுக்கப்பட்டு, அவர்கள் குடிமைக் கடனை எதிர்நோக்கலாம். குற்றங்களின் அறிவிப்பு, வழக்கு தொடுத்தல், குற்றம் சுமத்தல் ஆகியவை ஆட்கடத்து வியாபாரத்தின் தடுப்புச் சட்டத்திலுள்ள 11 முதல் 14 வரையிலான பிரிவுகளில் கூறப்பட்டுள்ளன.

## 7.1. ஆட்கடத்து வியாபாரத்தைக் காட்டும் எச்சரிக்கை அறிகுறிகளும் பொதுவாகக் கடத்துவோர் செய்பவையும்:

- மிரட்டல் மற்றும் அடிப்பதன் அச்சச் சூழ்நிலைகளை உருவாக்குவது;
- உடல், உளவியல் தீங்கு / தொந்தரவு அல்லது பாலியல் சிரமம் அல்லது பிற வகை வன்முறைச் செயல்களை ஏற்படுத்துவது;
- நீங்கள் விட்டுப் போதல் அல்லது உங்களிடம் தவறாக நடத்ததற்குப் புகார் செய்தல் அல்லது அதிகாரிகளிடம் அவர்கள்மீது புகார் செய்தல் அல்லது உதவி கேட்டல் ஆகியவற்றைச் செய்ய முயன்றால் உங்களை அல்லது உங்கள் குடும்பத்தை மிரட்டுவது;
- உங்கள் சொந்த நாட்டுக்கு அனுப்பப்படுவீர்கள் அல்லது உதவி கேட்டதற்குக் கைது செய்யப்படுவீர்கள் என்று உங்களை மிரட்டுவது;
- நீங்கள் வேலை செய்யும் இடத்திலிருந்தோ தங்கும் இடத்திலிருந்தோ தடையின்றிப் போய் வருவதிலிருந்து உங்களைத் தடுப்பது;
- உங்கள் கடவுச்சீட்டு / பயண ஆவணங்கள் நிறுத்தி வைக்கப்படுவது அல்லது பறிமுதல் செய்வது;
- உங்கள் நண்பர்கள் அல்லது உறவினர்களுடன் தொடர்புகொள்வதிலிருந்து உங்களைத் தடுப்பது;
- உங்கள் சொந்தப் பணத்தின்மீது கட்டுப்பாடு இல்லை;
- உங்கள் நிலைமையைப் பற்றி உண்மை சொல்லாமல் பொய் சொல்ல உங்களை வற்புறுத்துவது;
- உங்களிடம் போதிய கல்வித்தகுதி, திறமைகள், அனுபவம் ஆகியவை இல்லாவிட்டாலும், சில நேரங்கள் குறிப்பாக உங்கள் வயது மற்றும் உடல் கூறுகளின் காரணமாக உங்களை வேலையில் அமர்த்துவது;
- அதிகப் பணம், நல்ல வாழ்க்கை, பிற பரிசுகள் ஆகியவை உங்களிடம் உறுதி செய்யப்பட்டு, வேலை வகை, வேலை செய்ய வேண்டிய மணிநேரங்கள், வேலை அல்லது வாழ்க்கை நிபந்தனைகள், அல்லது ஊதியம் ஆகிய பொய்யான உறுதிமொழி செய்யப்படுவது;
- கடத்துவோரால் உருவாக்கப்பட்டுச் சாற்றப்பட்ட கடன்களைப் பற்றி உங்களை மிரட்டுவதும் ஒரு கடனைத் திருப்பிக் கொடுக்க வேலை, தொண்டுகள் அல்லது வணிகத்துக்குரிய பாலியல் செயல்கள் (விபசாரம்) செய்ய உங்களை வற்புறுத்துவதும்.










## 7.2. ஆட்கடத்து வியாபாரத்துக்கு ஆளானவர்களுக்கு எந்த உதவி அளிக்கப்படுகிறது?



அரசாங்க அதிகாரியின் பாதுகாப்புகீழ் நீங்கள் ஒரு புகலிடத்தையும், மருத்துவ மற்றும் உளவியல் உதவியையும் தகுந்த கவனத்தையும் (உணவும் உடையும்) பெற அனுமதிக்கப்படலாம். உங்கள் நாட்டுக்குத் திரும்பிப் போவதற்கு அரசாங்க அதிகாரிகள் உங்களுக்கு உதவி செய்யலாம்.

ஆட்கடத்து வியாபாரத்துக்கு ஆளானவரை 42 நாட்கள் வரை நாட்டில் தங்கச் சட்டம் அனுமதிக்கிறது. புகலிடத்தில் அல்லது ஏற்கத்தக்க மனிதன், சங்கம் அல்லது நிறுவனத்தின் பாதுகாப்பில் உள்ளவர், விசாரணை, ஆட்கடத்தலின் வழக்கு தொடுப்பது ஆகியவற்றைப் பற்றி அரசாங்கத்துடன் உடன்பட்டால், அவருக்கு ஒரு பார்வையாளர் அனுமதிச்சீட்டு கொடுக்கப்படலாம்.

# உங்கள் உரிமைகளை

# அறியவும்

பொறுப்புத்துறப்பு: இந்தச் சிற்றேட்டில் உள்ள செய்திகள் ஒரு வழிகாட்டியாக மட்டும் கொடுக்கப்பட்டுள்ளன. பொருத்தமான சட்டங்கள் உங்களுக்குக் கூடுதலான செய்திகள் தரும்.